# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S. 146/2018

# CNR.No.TNCB19000

| | | | |
|---|---|---|---|
| 18.06.2024 | கார்த்திகா | க/பெ.வடிவேலு | .வா.சா.1 |

வா.சா.1 . கார்த்திகா மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

முதல் விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்தை பொறுத்து என் தாத்தா ராஜூ என்பவரின் பெயரிலுள்ள 03.06.1977 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 1.

2. எனது குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ.2.(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

3. எனது ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.3 ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

4, என் தாத்தா ராஜூ என்பவரின் 06.10.2017 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ. 4.

5. எனது தாயார் இந்திராணி என்பவரின் 06.05.2016 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ. 5,

6. எனது அப்பா செல்வராஜ் என்பவரின் 31.03.2017 தேதியி ட்ட இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ. 6.

7. எனது பாட்டி கண்ணம்மாள் என்பவரின் 06.10.2017 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ. 7.

8. எனது தாயார் இந்திராணி என்பவரின் 26.07.2016 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ. 8.

9. தாவா சொத்தை பொறுத்து எனது தாத்தா ராஜூ என்பவர் குடிநீர் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு எண்.025463 கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.9.

10 தாவா சொத்தை பொறுத்து என் தாத்தா ராஜு செலுத்திய 23.09.2015 தேதியிட்ட சொத்து வரி ரசீது அசல் வா.சா. ஆ. 10.

11. தாவா சொத்தை பொறுத்து எனது தாத்தா ராஜு செலுத்திய 18.01.2016 தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.11.

12. நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய 29.12.2017 தேதியிட்ட வழக்கறிவிப்பு அலுவலக நகல் வா.சா. ஆ.12.

13. மேற்கண்ட வழக்கறிவிப்பு அனுப்பியதற்கான ரசீதுகள் - 5 அசல் வா.சா.ஆ. 13.

14. வழக்கறிவிப்பை 4 ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ. 14.

15. வழக்கறிவிப்பை மற்ற பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாததால் திருப்பபட்ட அஞ்சலக உறை - 4 எண்ணிக்கை அசல் வா.சா.ஆ. 15.

16. எனது தாத்தா ராஜுவின் பெயரிலுள்ள 04.04.1997 தேதியிட்ட உயில் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 16.

**4-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சிறுமுகை உயர்நிலைப்பள்ளியில் 6- 2003 -2004 ம் ஆண்டில் படித்தேன். 6-ம் வகுப்பில் இருந்து 12-ம் வகுப்பு வரை படித்தேன். 12-ம் வகுப்பு முடித்த வருடம் தான் ஞாபகம் இருக்கிறது. 6-ம் வகுப்பிலிருந்து 12-ம் வகுப்பு வரை ஒரே பள்ளியில் படித்தேன். ராஜு , கண்ணம்மாள் என்பவர்கள் முறையே என் தாத்தா பாட்டி ஆவார்கள். எனது தாத்தா ராஜு 28.06.2015 ம் தேதி இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது பாட்டி கண்ணம்மாள் 08.04.2017 ம் தேதி இறந்து விட்டார் என்றால் சரிதான்.

அவர்களுக்கு ஒரே மகன், 4 பெண்கள் என்றால் சரிதான். பாலகுமார் என்பவர் ஒரே மகன். ருக்மணி, மல்லிகா, இந்திராணி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோர்கள் மகள்கள். ருக்மணியும் இந்திராணியும் இறந்து விட்டார்கள். ருக்மணிக்கு 1973 ல் திருமணம் ஆனது என்றால் வருடம் ஞாபகம் இல்லை. மல்லிகாவுக்கு 1985 ல் திருமணம் ஆனது என்றால் அதுவும் ஞாபகம் இல்லை. இந்திராணிக்கு 1984 ல் திருமணம் ஆனது.

ஜெயலட்சுமிக்கு 1990 ல் திருமணம் ஆனது என்றால் ஞாபகம் இல்லை. நான் பிறப்பதற்கு முன்பே ருக்மணி, மல்லிகாவுக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். நான் பிறந்த பிறகு ஜெயலட்சுமிக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். இந்திராணியின் குழந்தைதான் நானும் பாலமுருகன் என்றால் சரிதான். ருக்மணிக்கு அவிநாசியில் உள்ள கருக்கம்பாளையத்தில் திருமணம் ஆனது என்றால் சரிதான். மல்லிகாவுக்கு மேட்டுப்பாளையத்தில் திருமணம் ஆனது. எனது தாயாருக்கு இடுகம்பாளையத்தில் திருமணம் ஆனது.

ஜெயலட்சுமிக்கு ஊட்டியில் உள்ள குந்தா பாலத்தில் திருமணம் ஆனது என்றால் சரிதான். ஒரு மகன் 4- மகள்கள் ஆகியோருக்கும் என் தாத்தா ராஜூ என்பவர் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் தாத்தா சிறுமுகையில் வசித்து வந்தார். என் தாத்தாவுக்கு சிறுமுகை அதை சுற்றியுள்ள கிராமங்களில் சொத்துக்கள் உள்ளது. திருமணமானவுடன் அவரவர்கள் அவர்களுடைய கணவர் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

என் தாத்தாவும் பாட்டியும் 5 குழந்தைகளையும் ஒரே மாதிரியாக தான் பராமரித்து வந்தார் என்றால் என் மாமாவை மட்டும்தான் படிக்க வைத்தார்கள். பிள்ளைகளை படிக்க வைக்கவில்லை. என் தாத்தா பாட்டி ஆகியோர் என் தாயாருடனும் அவருடன் பிறந்தவர்களையும் அன்புடனும் பாசத்துடனும் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் தாத்தாவும் பாட்டியும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மகள்களுக்கு சொத்துக்கள் ஏற்பாடு செய்வதாக சொன்னார்கள்.

எனது தாத்தாவும் பாட்டியும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மகன் மற்றும் மகள்களுக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்றால் யாருக்கும் எழுதிக் கொடுக்கவில்லை. எனது தாத்தா உயிருடன் இருக்கும்பொழுது தனக்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்களை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு எனது தாத்தா வா.சா.ஆ. 4 ஆவணத்தின் முன்னிலைக்கு சர்வே எண்.701/3 க்கு பிளாட் எண்.30 என்ற சொத்து எழுதி வைத்தார் என்றால் நகை போடவில்லை என்பதால் எழுதி வைத்தார். எனது சித்தி ஜெயலட்சுமிக்கு எனது தாத்தா வா.சா.ஆ.3 முன்னிலைக்கு சொத்து எழுதி வைத்தார் என்றால் சரிதான்

2001 ம் ஆண்டு எனது தாத்தா எனது தாயாருக்கு வா.சா.ஆ.2 முன்னிலைக்கு சொத்து எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதே போல் மற்ற இரண்டு மகள்களுக்கும் எனது தாத்தா சொத்துக்கள் எழுதி வைத்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. தானசெட்டில்மெண்ட் மூலமாக எனது தாத்தா 4 ம் பிரதிவாதி பாலகுமாருக்கு சில சொத்துக்களை எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு பாலகுமார் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை.

இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு 4 ம் பிரதிவாதி பாலகுமார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தனக்கு உயில் மூலமாக சில சொத்துக்களை தனது தகப்பனார் கொடுத்ததாக சொல்லி இருக்கிறார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்திலும் மற்றொரு 30.05.1977 தேதிய என் தாத்தா பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்திலுள்ள கையெழுத்தும் என்னுடைய தாத்தாவுடைய கையெழுத்தா என்றால் எனக்கு தெரியவில்லை. 1997 ம் வருடம் எனக்கு என்ன வயது என்றால் 15 வயது. அப்பொழுது நான் பள்ளியில் படித்து வந்தேன்.

நான் என் தாய் தகப்பனாருடன் எனது தகப்பனார் வீட்டில் அப்போது இருந்தேன். அந்த சமயத்தில் எனது தாத்தா பாட்டி ஆகியோர்கள் சிறுமுகையில் வேறொரு வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் பக்கத்தில் இருந்தார்கள். ஒரு வீதி தள்ளி இருந்தார்கள். எனது தாத்தா பாட்டியின் அன்றாட நடவடிக்கைகள் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய பெரியம்மா மற்றும் சித்திகளுக்கு எனது தாத்தா எழுதி வைத்த சொத்துக்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவர்களுக்கு எழுதி வைக்கவில்லை என்பது தெரியும்.

பாலகுமாருக்கு எழுதி வைத்த உயில் சாசனம் பதிவு செய்யப்பட்டது என்றால் பதிவு செய்யப்பட்டதாக சொன்னார்கள். இன்றைய தேதிவரை ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்த வா.சா. ஆ 16 உயில் சாசனம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2021 ம் ஆண்டு வா.சா.ஆ 16 ஐ நகல் எடுத்து பார்த்திருக்கிறேன் என்றால் சரிதான். 2021 ம் ஆண்டில்

எதற்காக நகல் எடுத்து பார்த்தேன் என்றால் மின்சார கட்டண ரசீதில் பெயர் மாறியி ருப்பதாக சொன்னார்கள் அதனால் எடுத்து பார்த்தேன்.

உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்று பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் சாட்சிகள் யார் என்று எனக்கு தெரியாது. உயி ல் எழுதியது யார் என்பதை பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் பார்க்கவில்லை. சாட்சிகள் மற்றும் பத்திரத்தை எழுதியவர்களை விசாரித்து பார்த்தேனா என்றால் இல்லை. எந்த வருடம் மின்சார கட்டணம் கட்டச்சொல்ல பெயர் மாறியிருப்பதை தெரிந்து கொண்டேன் என்றால் 2019 ம் ஆண்டு தெரிந்து கொண்டேன்.

2019 ம் ஆண்டிலேயே மின் இணைப்பு கட்டணம் செலுத்தும் போதே பெயர் மாறி இருப்பதை அறிந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதன் பிறகு தான் விசாரித்து நடவடிக்கை எடுத்தேன். 2019 ம் ஆண்டு எனது வழக்கறிஞரை அணுகி னேன். எனது தாத்தா இறந்த பிறகு உயிலில் கண்ட சொத்தின் வீட்டு வரி, சொத்து வரி சொத்தின் மின் இணைப்பு ஆகியவை மாற்றம் செய்யப்பட்டது என்றால் ஒரு வரி நான் செலுத்திய பிறகுதான் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

உயிலில் சொல்லப்பட்ட சொத்துக்கள் 7 வீடுகள் ஆகும். அந்த 7 வீடுகளும் வாடகைக்கு விடப்பட்டிருந்தது என்றால் சரிதான். என் தாத்தா இறந்ததற்கு பின்னிட்டு என் பாட்டி வாடகை வாங்கி வந்தார் என்றால் சரிதான். ஏப்ரல் 2017 ல் என் பாட்டி இறந்த பிறகு எனது மாமா வாடகையை வாங்கி வந்தார் என்றால் சரிதான்.எனது பெரியம்மா மற்றும் எனது சித்திகள் யாருமே வாடகை வசூலிக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எனது தாயாருடன் உடன் பிறந்த சகோதரிகளை வழக்கு தாக்கல் செய்வதற்கு அழைத்தேனா என்றால் அழைத்தேன். ஆனால் அவர்கள் அனைவரும் பாலகுமாருக்கு உயில் எழுதி வைத்து விட்டதால் வழக்கு தாக்கல் செய்ய வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள் என்றால் வசதியில்லை என்பதால் செலவு செய்ய இயலாது என்று சொல்லி விட்டார்கள். அவர்கள் என்ன எதிர்வாதம் செய்கிறார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

எனது வழக்கறிஞரிடம் மற்ற பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்கிறார்கள் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். உயிலில் உள்ள சொத்துக்களை பொறுத்து தண்ணீர் வரி , சொத்து வரி மின் இணைப்பு கட்டணம் ஆகியவற்றை மாற்றியது குறித்து பஞ்சாயத்திலும் மின் வாரியத்திலும் மாற்றியது தவறு என்று மனு கொடுத்தேனா என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததால் கொடுக்கவில்லை. சொத்தில் எங்களுக்கும் உரிமை உள்ளது என்று பெயரை சேர்க்கச் சொல்லி மனு கொடுக்கவில்லை என்றால் வழக்கு இருந்ததால் கொடுக்கவில்லை.

என் பாட்டி இறந்ததற்கு பின்னிட்டு உயில் சொத்தில் உள்ள வாடகைதாரரிடம் பாலகுமார் வாடகை வாங்கி வருவதில் எங்களுக்கும் பங்கு கொடுக்கும்படி கேட்டு அவருக்கு அறிவிப்பு எதாவது அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை ஆனால் வாய்மொழியாக கேட்டேன். அப்பொழுதே வாடகை கேட்டதற்கு கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் தனக்கு உயில் எழுதி வைத்திருப்பதாகவும் அதனால் எனக்கு வாடகை கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார் என்றால் சரிதான்.

உயிலில் எனது பாட்டிக்கு ஜீவனாம்ச உரிமை கொடுத்து அவருடைய ஜீவிய காலத்திற்கு பின்பு சொத்தின் முழு உரிமையும் பாலகுமாருக்கு கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது தாத்தா மற்றும் பாட்டி இறந்ததற்கு பின்னிட்டு அவர்களுடைய நான்கு மகள்களும் தாவா சொத்தில் உரிமை கேட்டு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அதனால்தான் உயில் சாசனம் எழுதி வைத்த விபரம் அவர்களுடைய நான்கு மகள்களுக்கும் தெரிந்ததால்தான் தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கேட்கவில்லை என்றால் சரிய ல்ல.

உயிலானது என் தாத்தா இறந்த பிறகு நடைமுறைக்கு வந்து விட்டது என்றும் அது அமுலுக்கு வந்து விட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக வாதுரை செய்கிறேன் என்றால் சரியல்ல. உயில் சொத்தில் எனக்கு எந்த பங்கும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.